RECEIVED
7-2-?

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆடி: 8 ஷஃபா: 17 இதழ்: 163
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24-7-78

# ஆசிய கல்விமாநாடு: இன்று கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

ஆசிய நாடுகளின் கல்வித் துறை வளர்ச்சி பற்றிய பிராந்திய மகாநாடு இன்று கொழும்பில் ஆரம்பமாகிறது. இருபத்தைந்து நாடுகள் கலந்து கொள்ளும் இம்மாநாட்டை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இன்று காலை 10 மணிக்கு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மகாநாட்டு மண்டபத்தில் ஆரம்பித்து வைப்பார்.

ஆசியாவின் கல்வித் துறைபற்றி விரிவாக ஆராயப்படும் இம்மகாநாட்டில் கிராமிய அடிப்படையிலான கல்விச் சீர்திருத்தங்கள், சமூகக் கல்விமுறை, ஆகியவை குறித்தும் ஆலோசிக்கப்படும்.

இந்த மகாநாட்டில், ஆசிய நாடுகளைச் சேர்ந்த கல்வி அமைச்சர்களும் மற்றும் பொருளாதார திட்டமிடல் நிபுணர்களும் கலந்து கொள்கின்றார்கள். ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, நியூகினி ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் மகாநாட்டில் கலந்து

(6-ம் பக்கம் பார்க்க)

# சகல மக்களுக்கும் “சம வாய்ப்பு”

## ஜனதிபதி ஜே. ஆர். அறிவிப்பு

(கண்டி)

**“புதிய அரசியலமைப்புத் திட்டத்தில், மக்களின் அபிலாசைகளுக்கு இணங்கச் சகல அடிப்படை உரிமைகளும் சகல மக்களுக்கும் சம வாய்ப்பும் அளிக்கப்படும்.”**

இவ்வாறு ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, கண்டி போகம்பரை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

அரசின் ஓராண்டுப் பூர்த்தி விழாவையொட்டி விவசாயக் காணி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஜயவர்த்தன மேலும் கூறியதாவது:

“இன்றைய ஆட்சி, எக்காரணங்கொண்டும் 6 ஆண்டுகளுக்கு மேல் பதவி வகிக்காது. அதேபோல், எந்த அரசு பதவிக்கு வந்தாலும் 6 ஆண்டுகளுக்கு மேல் பதவியில் இருக்காதவாறு புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தில் ஷரத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கும்.”

# மரங்களைத் தறிக்கத் தடை!

(கண்டி)

காட்டு நிலங்களில், மரங்களைத் தறிப்பது தடை செய்யப்படவிருக்கிறது.

கண்டியில் நேற்று நடைபெற்ற வைபவமொன்றில் கைத்தொழில் அமைச்சர் திரு. ஜி. சிறில் மத்தியூ பேசுகையில் “காட்டு நிலங்களில் மரங்கள் தறிப்பதைத் தடைசெய்யும் சட்டம் அதிவிரைவில் அமுலுக்கு வரவிருக்கிறதென்றும், காட்டு மரங்களைத் தறிப்பதன் மூலம், மர ஒப்பந்தக்காரர் பெருமளவு லாபம் சம்பாதிக்கிறார்கள்” என்றும் கூறினர்.

# “சிறுபான்மைத் தமிழர்கள் தமிழின விடுதலைக்கு உயிரைக் கொடுத்தேனும் போராடவேண்டும்”

## — உடுப்பிட்டி எம். பி. இராஜலிங்கம்

(நெல்லியடி)

தமிழ் சமூகத்தில் சிறுபான்மை சமூகத்தினர் மூன்றிலொரு பகுதியினர் உள்ளனர், அவர்கள் தமிழ் இனத்துடன் இணைந்து வாழ்வதா? பிரிந்து வாழ்வதா? எனச் சிந்திக்கிறார்கள். இந்நேரத்தில் அரசியல் காரணங்களை நீக்கிவிட்டு, எமது தமிழினத்தின் விடுதலைக்காக, சிறுபான்மை சமூகத்தினர் உயிரைக்கொடுத்தேனும் போராட்டத்தில், சாவையும் வாழ்வையும் ஒன்றாகக்கருதி செயற்படவேண்டும்.

தேவரையாளி இந்துக்கல்லூரி 24வதுஆண்டு பரிசளிப்பு விழாவில் பேசிய உடுப்பிட்டித் தொகுதி எம். பி. திரு. த. இராசலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

சமூக மறுமலர்ச்சியையும் மனிதாபிமான உணர்ச்சிகளையும் வளர்த்துவர வேண்டிய பொறுப்பு இக்கல்வி நிறுவனத்திற்கு உண்டு. தமிழ்மக்களுக்கிடையே இன்று பல பிரச்னைகளும் உள்ளன. சமூகபொருளாதார ரீதியான பிரச்னைகள் முக்கியமாகத் தென்படுகின்றன. பிரச்னைகள் இல்லாமற் செய்துவிட விடுதலைப்போரை நடத்தவேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடுகளும் உணர்வுகளும் சிந்தனைகளும் தோன்ற தமிழ் மக்கள் இடமளிக்கக்கூடாது. இதற்கு பதிலாக விடுதலைப் பாதையில் நடைபோடும் பொழுது சமூக ஏற்றத்தாழ்வுகளை மறந்து இனத்தின் விடுதலை ஒன்றினையே சிந்தித்துச் செயற்படவேண்டும்.

### ஒன்றேகால் லட்சம் ரூபா

# பெற்றோர் - ஆசிரியர் சங்க அசிரத்தையால் வீணாகிறதாம்

(வட்டுக்கோட்டை)

‘காலத்திற்குக் காலம் அரசாங்கம் ஏற்படுத்துகின்ற கொள்கைத் திட்டத்தினல் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பது கஷ்டமாகவுள்ளது. இன்று வட்டுக்கோட்டைத் தொகுதியில் ஆசிரியர் பற்றாக்குறை 110 ஆகவுள்ளது’ என்று காரைநகர் யாழ்டன் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது இக் கல்லூரியில் உள்ள விஞ்ஞான ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பேன். சென்ற வருடம் இக்கல்லூரியின் கட்டடநிதிக்கு ஒதுக்கப்பட்ட மூன்று லட்சரூபாவில் ஒரு லட்சத்து இருபத்தி மூவாயிரம் ரூபா சென்ற வருடம் செலவிடப்படாததால் இப்பணத்தை இந்த வருடம் ஒதுக்கவேண்டியுள்ளது. கட்டடத்தைக் கட்டுவதற்கு பொறுப்பேற்ற பெற்றோர் ஆசிரியர் சங்கம் இக்கட்டிட வேலையை சென்ற வருடமே முடித்திருந்தால் இன்று ஒரு லட்சத்து இருபத்திமூன்றாயிரம் ரூபாவை இத்தொகுதியின் வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு செலவு செய்திருக்கலாம். நான் எடுத்த நடவடிக்கைகளின் மூலம் இக்கட்டடம் கட்டி முடிக்கப்பட்டும் ஒரு சில குரோத மனப்பான்மையால் இக்கட்டிடத்தை அதிபரிடம் கையளிக்காததால் மாணவர்கள் இக்கட்டிடத்தை பயன்படுத்த முடியாது உள்ளது. இம்மாத இறுதிக்குள் இக்கட்டிடம் அதிபரிடம் கையளிக்கப்படாவிட்டால் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின்மீது நடவடிக்கை எடுத்து இக்கட்டிடத்தை நானே பொறுப்பேற்று அதிபரிடம் கொடுக்கவுள்ளேன்.’

(அ)

# “அமரர் குமாரசாமிக்கு நாம் செய்யும் கைமாறு என்ன?”

## நினைவுக் கூட்டத்தில் கம்யூ. வைத்திலிங்கம் உரை

(யாழ்ப்பாணம்)

“நாம் எந்த இனத்தையோ மதத்தையோ சேர்ந்தவர்களாகஇருந்த போதிலும்தொழிலாள வர்க்கத்தினரின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகின்றோம். நமது இயக்கத்தில் இருந்து பிழைகள் விட்டுச் சென்றவர்கள் திரும்பவும் இயக்கத்திற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சி வட பிரதேசசெயலாளர் திரு. அ. வைத்திலிங்கம் கம்யூனிஸ்ட் பிரமுகர் அமரர் செ. குமாரசாமியின் ஞாபகார்த்தக்கூட்டத்திற்குதலைமைவகித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

கம்யூனிஸ்ட்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வைத்திலிங்கம் தொடர்ந்துபேசுகையில்கூறியதாவது: “திரு. குமாரசாமி எந்த இலட்சியத்துக்காக வாழ்ந்தாரோ அந்த இலட்சியத்துக்காகக் சடைசிவரை தம்மைத் தியாகம் செய்தார். ஆட்சியிலுள்ள சர்வாதிகார அரசாங்கத்திற்கு எதிராகசகல முற்போக்கு சக்திகளும் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் தலைமையில் போராடுவதே காலஞ்சென்ற குமாரசாமிக்குச் செய்யும் கைமாறாகும்” என்றார்.

கம்யூனிஸ்ட்கட்சி அரசியல் குழு உறுப்பினரான திரு. டி. யூ. குணசேகரா பேசுகையில், அரசாங்க விகிதர் சேவைச்

[6-ம் பக்கம் பார்க்க]

### கூட்டணி தேசிய மகாநாடு:

# நூறு பிரமுகர்களுக்கு அழைப்பு

## பார்வையாளராக வி. பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

“தமிழர்விடுதலைக்கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில், இன்றைய தமிழ் மக்களது அரசியல்நிலை பற்றிப் பல கோணங்களிலிருந்தும் ஆராயப்படும். விடுதலை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான முக்கிய அரசியல் தீர்மானங்கள் இம்மாநாட்டில் எடுக்கப்படும்” என்று, நேற்றுமாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கூட்டணியின் சிரேஷ்டஉறுப்பினரும், மாநாட்டுக்குழுத் தலைவருமான கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை குறிப்பிட்டார்.

கோப்பாய் எம். பியின் இல்லத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

“கடந்த ஒருவருடத்தில் தமிழ் மக்களை எதிர்நோக்கிய பலபிரச்சனைகளும், அதற்கான பின்னணிக்காரணிகளும், கலவரத்திற்கான பாதிப்புக்களும் பற்றி ஆராயப்படும். அரசாங்கம் கொண்டுவரவுள்ள அரசியல் (திருத்த) அமைப்பில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைபற்றி ஆராய்ந்து, இறுதி முடிவெடுக்கப்படும். இந்த மாநாட்டின் தீர்மானங்கள் பொதுக் கூட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்டு, விடுதலை இயக்கத்தின் போக்கு தெளிவாகவும், தீவிரமாகவும்அமைக்கப்படும்.

‘மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு, சர்வகட்சித் தலைவர்கள். வெளிநாட்டுத் தூதுவர்கள், பொதுப்பிரதிநிதிகள் என்று நூறு பிரமுகர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. இவர்கள் கொடியேற்ற வைபவத்திலும், கலைநிகழ்ச்சி, பொதுக்கூட்டம் ஆகிய நிகழ்ச்சிகளில் மட்டும் பார்வையாளராகக் கலந்துகொள்வார்கள்.

செர் தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வி பொன்னம்பலம் பார்வையாளராக அழைக்கப்படுவார். (கெ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பத்து நெசவு தறிகள் பெர்மிட்டுடன் விற்பனைக்குண்டு. சரஸ்வதி ஸ்ரோர்ஸ், 55, பெரிய கடை, யாழ்ப்பாணம். 9878

பொமனேரியன் பெண்நாய் குட்டியும் ஜமனபாரி ஆடும் விற்பனைக்கு உண்டு. 5, விக்டோரியா றேட், யாழ்ப்பாணம். 9880

### தேவை

யாழ்ப்பாணம், கொட்டடி வைரவர் கோவிலுக்கு இருவேளை பூசைசெய்வதற்கு அந்தணர் தேவை. தகைமையுடன் தபால் மூலம் விண்ணப்பிக்கவும். வே. கந்தசாமி, 236, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 9879

### முதற்கண் முற்றுகும் ஆணைபற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற புலோலி மேற்கு சண்முகம் கணபதிப்பிள்ளையினதும் பெண் சிவபாக்கியத்தினதும் ஒருமித்த மரணசாதனவிடயத்தில்

- மரணமெய்தியவர்

மரணசாதன )
)இல. 1047
நியாயாதிக்கம் )

கணபதிப்பிள்ளை சண்முகநாதன் புலோலி மேற்கு, பருத்தித்துறை.

- மனுதார்

மேலே குறித்த இலக்கமுடைய வழக்கு மேற்குறித்த மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்திலே தொடரப்பட்டுள்ளதெனவும் 1978ம் ஆண்டு ஆனி மாதம் 5ம் திகதியன்று அதற்கிணங்க அதில் முதற்கண் முற்றுகும் ஆணை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றின் ஆணைப்படி.

**க. விஸ்வலிங்கம்**
பதிவாளர்
மாவட்ட நீதிமன்று,
பருத்தித்துறை.

1978-ம் ஆண்டு ஆனிமாதம் 30 நாளன்று திகதியிடப்பட்டது.

வரைவு:
மு. க. முத்துக்குமார்
மனுதாரின் சட்டத்தரணி.
9862

## சத்திர சிகிச்சை வார்ட்டில் பிரசவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியாஸ்பத்திரி சத்திர சிகிச்சை வார்ட்டில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணி பெண் ஒருவர் அங்கேயே வைத்து அழகிய ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுகிர்தா (வயது 20) என்ற பெண்மணி பிரசவத்திற்காக நேற்று நள்ளிரவு 2-30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பிரசவத்திற்காக வந்த இப்பெண்ணை பிரசவ வார்ட்டிற்குப் பதிலாக பெண்களுக்கான சத்திர சிகிச்சை வார்ட்டில் (1-ம் வார்ட்) அனுமதிக்கப்பட்டு சுமார் 15 நிமிடத்தில் அங்கு குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

அக்குழந்தையின் அழுகுரல் கேட்டதையடுத்து அங்கு விரைந்த ஊழியர்கள் தாயையும் சேயையும் பிரசவ வார்ட்டில் சேர்த்தனர். (கெ)

## "தூய கடமையே நற்பெயர் அ[illegible]ரிக்கும்"

(யாழ்ப்பாணம்)

"பொலிசார் தமது கடமையின் போது ஏழை - பணக்காரன் என்ற பாகுபாடு காட்டக்கூடாது. சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்பது நிலைநாட்டப் படவேண்டும்".

இவ்வாறு காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரீண்டன்ட் திரு. நிமால் சில்வாவும், காங்கேசன்துறை பொலிஸ்நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரியாகப் பதவியேற்றுள்ள திரு. மெண்டிஸ் குருஸும் வலியுறுத்திக் கூறியுள்ளனர். பொலிசார் மத்தியில் இது குறித்து இவர்கள் வகுப்புவைத்து வலியுறுத்துகையில் மேலும் கூறியதாவது "பொதுமக்களின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ளும் விதத்தில் பொலிசார் நடந்துகொள்ளக் கூடாது. தூய்மையான கடமையின் மூலமே நற்பெயர் எடுக்க முடியும்.

சமுதாயத்தில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடில்லாமல் சகலருக்கும் ஒரே கடமையைச் செய்ய வேண்டும்.

பொதுமக்களுடன் சுமுகமாகப் பழகி குற்றச்செயல்களை ஒழிக்கும் வகையில் சிறந்த பணியாற்றி பொலிசார் இலாகாவுக்கு பெருமை தேடித்தர வேண்டும்.

புகார்கள் குறித்து தாமதமற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டாலே பொதுமக்களின் நல்லெண்ணத்தைப் பெற முடியும்". (உ)

யாழ்ப்பாண நகரில் மரம் நாட்டு விழா

## மாநகர ஆணையாளர் ஆரம்பித்து வைத்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் பல இடங்களில் நேற்று முன்தினம் மரம் நாட்டு விழா இடம்பெற்றது.

நாடு முழுவதும் நடைபெறும் மரம் நாட்டு விழாவில் யாழ். நகரின் பங்கு என்ற முறையில் நகர விசேஷ ஆணையாளர் அலுவலகங்களுக்கு முன்னுலுள்ள இடங்களிலும் பொது இடங்களிலும் பயனுள்ள மரங்களை நடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

நகரமண்டப வளவு: மீன் சந்தைக்கருகிலுள்ள இடம், பொதுநூல் நிலைய வளவு, திறந்தவெளி அரங்குபோன்ற இடங்களில் நேற்றுமுன்தினம் விசேஷ ஆணையாளரின் ஏற்பாட்டில் மரங்கள் நாட்டப்பட்டன, மரம் ஒன்றை முதலில் நாட்டு விழாவை விசேஷ ஆணையாளர் ஆரம்பித்துவைத்தார். மா, பலா போன்ற பயனுள்ள மரங்கள் நாட்டப்பட்டன.

### யாழ். லயன்ஸ் கழகம்

(யாழ்ப்பாணம்)

அரசின் ஓராண்டை நினைவுறுத்தும் மரம்நாட்டு இயக்கத்தில் யாழ் லயன்ஸ் கிளப் நேற்றுமுன்தினம் யாழ். வளாகத்தில்பல இன மரக்கன்றுகளை நாட்டினர்.

இவ் வைபவத்தில், புதிய விஞ்ஞான விரிவுரையாளர் மண்டபத்துக்கு முன்னுல் முதலாவது கன்றை யாழ். வளாக தலைவர் கலாநிதி சு. வித்தியானந்தன் நாட்டிவைத்தார். தொடர்ந்து பல மரக்கன்றுகளை லயன்ஸ் கழகப் பிரமுகர்களும், விரிவுரையாளர்களும் நாட்டினர். மரம் நாட்டுவதற்கான சிரமதானம் பணிகளை யாழ். லியோ கழகத்தினர் செய்திருந்தனர், (கெ-இ)

புங்குடுதீவில்

## 'தளபதி அமிர்தலிங்கம்' நூல் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

'களம் பல கண்டகாளை தளபதி அமிர்தலிங்கம் என்னும் நூல் வெளியீட்டுவிழா புங்குடுதீவு பெருங்காடு கந்தசாமிகோவில் அருகாமையில் இம்மாதம் 26-ந் தேதி நடைபெறவிருக்கிறது.

திரு. நாகபத்மநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் திரு. வே. க. சோமசுந்தரம் மங்கள விளக்கேற்றிவைப்பார். திரு. ஆ. தா. கருணனந்தசிவம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் விழாவை ஆரம்பித்து வைப்பார்.

கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, யாழ் எம். பி. திரு வெ. யோகேஸ்வரன், வித்துவான் சி. ஆறுமுகம், திரு. தா. தருமலிங்கம், திரு. சு. பரராசசிங்கம், திரு. தா. பாலச்சந்திரன், திரு. சு. குணரத்தினம், திரு. தா. சுந்தரராஜன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம் நூலை வெளியிட்டுவைப்பார்.

கோவை மகேசன், புலவர் ஈழத்துச்சிவானந்தன், சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் ஆகியோர் நூலாய்வுரைகள் நிகழ்த்துவார். (க-அ)

## வழிமறித்துத் தாக்குதல்: ஆசிரியர் படுகாயம்

(பண்டத்தரிப்பு)

இரவு வேளையில் வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பாடசாலை ஆசிரியர் ஒருவர், வழி மறித்து இனந்தெரியாத கோஷ்டியொன்றினுல் தாக்கப்பட்ட சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு சில்லாலை - மாதகல் வீதியில் நடைபெற்றுள்ளது.

சில்லாலை வாசியான பஸ்தியாம்பிள்ளை என்ற பிரஸ்தாப ஆசிரியர் தலையில் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் தொடர்பாக சங்கானைப் பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சங்கானைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. ரி. ஜே. மிஸ்கின் தீவிர புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளார். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (உ)

## தனிக்குடித்தன அழைப்பு: இளம் மனைவி மரணம்

(யாழ்ப்பாணம்)

ஒருபுறம் தனிக்குடித்தனம் நடத்தவருமாறு கணவன் அழைத்தார். மறுபுறம் ஒரே மகளைப் பிரிந்துவாழமுடியாமல் தாயார் தவித்தார். இரண்டுக்கும் நடுவில் சிக்கித்தவித்த இளம்பெண் வேறுவழியின்றி நள்ளிரவில் கயிற்றில்சுருக்கிட்டு உயிரை மாய்த்துக்கொண்டார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த அர்ச்சுனன் செல்வராணி என்ற 22 வயதுஇளம் பெண்ணின் மரணவிசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரிதிரு. எஸ். எஸ். பிரான்சிஸ் விசாரணை நடத்தினுர்.

இரண்டரை வருடத்திற்கு முன் திருமணமான இப்பெண் தொடர்ந்து தாய்வீட்டில் வசித்து வருவதை விரும்பாத கணவன், தனிக்குடித்தனம் நடத்த வருமாறு அழைத்தபோது ஒரே மகளை பிரிந்துவாழ முடியாமல் தவித்த தாய், கணவனுடன் அனுப்ப மறுத்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது.

இப்பெண்ணின் சகோதரர்கள் வீட்டிற்கு இரவில் தாமதித்துவருவதால், அடிக்கடி வீட்டில் குடும்பத் தகராறு ஏற்படுவதாகவும் விசாரணையிம் கூறப்பட்டது.

சம்பவம் நடந்த இரவு கணவன் எழுந்து பார்த்தபோது, மனைவி சுருக்கிட்ட நிலையில் காணப்பட்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு, விசாரணையைப் பின்போட்டார். (க)

## சிவபாதசுந்தரனுர் நூற்றுண்டு விழாபோட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனுர் நூற்றுண்டு விழாவையொட்டிய பேச்சு, திருமுறைப் போட்டிகள் யாவும் பாடசாலை ரீதியில் முடிவுற்றன.

இவ்வார இறுதியுடன் 14 கல்வி வட்டாரங்களிலும் அரை இறுதி நிலையில் முடிவடைந்து இறுதிப்போட்டி அகில இலங்கை ரீதியில் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் இம்மாதம் 29-ந் திகதி நடைபெறும். இறுதிப்போட்டியில் 75 பாடசாலைகள் பங்குபற்ற உள்ளன.

இவ்விழா சம்பந்தமான சமய அறிவுப்போட்டி எழுத்துப்பரீட்சையாக ஆறும் வகுப்புக்கு மேலுள்ள மாணவர்களுக்கு பாடசாலை ரீதியில் நடைபெறும். இதில் 5 பாடசாலைகள் பங்குபற்றுகின்றன.

கீழ்ப்பிரிவில் 2500 மாணவர்களும், மத்தியபிரிவில் 2000 மாணவர்களும் மேற்பிரிவில் 500 மாணவருமாக மொத்தம் 5000 மாணவர்கள் இப்பரீட்சையில் பங்கு பற்றுவார்கள்.

பேச்சு, திருமுறை, சமய அறிவு நிகழ்ச்சிகளில் வெவ்வேறுபிரிவுகளில் முதல் மூன்று இடம் பெறுபவர்க்கு சான்றிதழ்கள் புத்தகப்பரிசுகள் வெற்றிக்கிண்ணங்கள் செப்டம்பர் 9ம் திகதி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் நூற்றுண்டு பெருவிழாவில் வழங்கப்படும். கல்விவட்டாரரீதியில் 3 இடம் பெற்றவர்களுக்கும் சான்றிதழ்கள் வட்டார ரீதியாக வழங்கப்படும்,

### கிளிநொச்சிப் பிரிவு

பேச்சுப்போட்டிகள் மத்திய பிரிவு - கீழ்ப்பிரிவு ஆகவும் ஆண்கள், பெண்களுக்குத் தனித்தனிப்பிரிவாகவும் கிளிநொச்சி புனித திரேசா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. வித்தியாலய அதிபர் செல்வி ராதாசோமசுந்தரம் தலைமையில் பேச்சுபோட்டிகள் நடைபெற்றன,

கிளிநொச்சி மகாவித்தியாலயம் டீ 7 சைவமகாவித்தியாலயம், புனித திரேசா மகாவித்தியாலயங்கள் ஆகியன பங்குபற்றின.

......

## பாடசாலை வளர்ச்சியில் இவர்கள் பங்கு

(வவனியா)

"ஒரு பாடசாலையின் வளர்ச்சி முன்னேற்றம், பெற்ரேர், பழைய மாணவர், கிராமமக்கள் ஆகியோரிலேயே தங்கியுள்ளது. இவர்கள் தத்தமது பாடசாலைகளில் விசேட கவனம் செலுத்துவார்களாயின் பாடசாலை சகலதுறைகளிலும் முன்னேற்றம் அடையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை" இவ்வாறு நெடுங்கேணிகற்குளம்கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற பெற்ரேர் ஆசிரியர் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தில் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. செ கணபதிப்பிள்ளை பேசுகையில் கூறினுர்.

வித்தியாலய அதிபர் திரு. த. ம. தேவேந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி தொடர்ந்து பேசுகையில், "முன்னையைப்போல்அல்லாது இப்போது பிள்ளைகளின் திறமைகளுக்குமதிப்பளிக்கப்பட்டு அவ்வழிகளிலே வழிநடாத்தப் படுகின்றனர். ஆசிரியர்கள் பிள்ளைகளுடன் இரண்டறக் கலந்து செயலாற்றுகின்ருர்கள். பிள்ளைகள் குழுக்காக இணைந்து ஒன்றிணைந்து செயலாற்ற வழி நடாத்தப்படுகின்றனர். இதனுல் நாம் பல வியக்கத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படுவதை நாம் அவதானிக்கிருேம். எனவே பெற்ருேர்கள் தனிப்பட்ட கோபதாபங்களை, போட்டி பூசல்களை மறந்து ஒன்றிணைந்து பாடசாலை வளர்ச்சியில் ஈடுபட வேண்டும்" என்ருர்.

நடப்புவருட பெற்ருேர் ஆசிரிய சங்க நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர் அதிபர் திரு. த. ம. தேவேந்திரன், உப தலைவர் மு. நாகலிங்கம், செயலாளர் ஆ. சிற்றம்பலம், உப செயலாளர் வே. சிவசிதம்பரம். பொருளாளர் வி. கதிரித்தம்பி. ஐந்து பேரைக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (உ)

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மகாவித்தியாலய பழைய மாணவர்சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. எஸ். ஆர். சண்முகரத்தினம் [அதிபர்], உபதலைவர்கள்: திருவாளர்கள் எஸ். சத்தியமூர்த்தி, சி. அருச்சுனன், எஸ். அப்புலிங்கம், எஸ். காசிப்பிள்ளை, திருமதி சத்தியமூர்த்தி, செயலாளர்: திரு. ரி. திருஞானசப்பந்தர், உப-செயலாளர்: திருமதி மகேஸ்வரி தில்லைநடராஜா, பொருளாளர்: திரு. கே. வி. நடராஜா. [உ[

# யாழ். பல்கலைக்கழகத்திற்கு தனியான நிதி ஒதுக்கீடு

## வளாக மாணவர் மத்தியில் நல்லூர் 'சிவா' நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு தனியான நிதி ஒதுக்கீடு கிடைக்கும் கிடைக்க வேண்டும். பல்கலைக் கழகங்கட்குதனித்துவம் அளிக்கும் மசோதா தேசியஅரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப் படும்போது இதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும் என்ற நம்பிக்கை எனக் குண்டு''.

இவ்வாறுநல்லூர் தேசியஅரசுப் பேரவைஉறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமாகிய திரு. மு. சிவசிதம்பரம் இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத்தில் வளாக மாணவர்களின் பிரச்னைகள் பற்றிய கலந்துரையாடலில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்.வளாக மாணவர்கள் தமது பிரச்சினைகள் குறித்து விசேஷ கலந்துரையாடல் ஒன்றைநேற்றுமுன்தினம்காலை வளாக இராமநாதன் மண்டபத்தில் நடாத்தினர். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சமூகசேவைச்சங்க பிரமுகர்கள் பொதுமக்கள் பிரதிநிதிகள் வளாக விரிவுரையாளர்கள் பல்கலைகழகங்களைச் சார்ந்த மாணவப்பிரதிநிதிகள் மற்றும் எதிர்கட்சித் தலைவர் திரு ஏ. அமிர்தலிங்கம் எம். பிக்களான திருவாளர்கள் எம். சிவசிதம்பரம் வி. யோகேஸ்வரன் வி.தர்மலிங்கம் சி. கதிரவேற்பிள்ளை வி. என்.நவரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். திரு. யோகேஸ்வரனுடன் செயற்குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த திருகோணமலை எம். பி. திரு. சம்பந்தனும் இக்கலந்துரையாடலில் பங்கு பற்றிச் சிறப்பித்தார் யாழ். வளாகத்தலைவர், பதிவாளர், மாணவப் பிரதிநிதிகள் ஆகியோர் யாழ் வளாகம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் எடுத்துக் கூறினர்.

மாணவர்களின் இருப்பிட வசதியின்மை, நூல்நிலையக் கட்டிடத்தின் அவலநிலை, விரிவுரையாளர் பற்றுக்குறை, யாழ். வளாக நூல்களை யாழ்ப்பாணக்கல்லூரிக்கு மீள அளிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள், நூலகத்தில் போதிய நூல்கள் இல்லாமை போன்ற பலதரப்பட்ட பிரச்னைகள் இம்மாநாட்டில் எடுத்துக்கூறப்பட்டன.

இவற்றுக்கு ஆட்சிமன்ற உறுப்பினர்கள் சார்பில் முதலில் பதிலளித்து பேசிய திரு. மு. சிவசிதம்பரம் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

### விடுதிவசதி

மாணவர்கள் இருப்பிட வசதியின்றித் தவிப்பதை என்னால் புரிந்து கொள்ளமுடிகிறது. இதற்கென அரசு நிரந்தர விடுதிவசதிகளை ஏற்படுத்தும்வரை தனியார் வீடுகளில் மாணவர்கள் வசிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இத்தொகுதியைச் சார்ந்தவன் என்றமுறையில் பல்கலைக் கழகத்துக்கு சுற்றுடலில் உள்ள வீடுகளைச் சேர்ந்த பிரமுகர்கள் கழுவொன்றை அமைத்து அக்குழுவின் மூலம் மாணவர்கள் தங்களுக்கு வசதியான அறைகளைப் பெற்றுக்கொள்ள வசதி செய்து கொடுப்பேன்.

### நூல்நிலையம்

நூலகக்கட்டிடத்தின் அவலநிலைபற்றி எடுத்துக்கூறினீர்கள். இதற்கு ஒரு கோடி ரூபா வரை நிதிதேவைப்படுகின்றது என்றும் சுட்டிக் காட்டினீர்கள். பல்கலைக் கழகங்கள் தனித்துவம் பெறும் மசோதா ஆட்சிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதும், யாழ்ப்பாண வளாகமும் தனித்துவமான பல்கலைகழகம் என்றமுறையில் தனியான நிதி ஒதுக்கீட்டைப்பெறும். அப்பொழுது கட்டிடங்கள் அமைக்கப்போதிய நிதிகிடைக்கக் கூடும்.

### ரூபா 10 லட்சம்வீதம் ஒதுக்கித்தர முயல்வோம்

நானும், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும், கோப்பாய் பிரதிநிதியும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் அனுமதி முதல் சகலவற்றிலும் பூரணதனித்துவம் உடையதாக இருக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளோம்.

''ஆயினும் தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் என்ற முறையில் இவ்வளாகத்தை வளர்க்க வேண்டிய பொறுப்பும் கடமையும் எங்களுடையது என்ற காரணத்தினால் எமக்குத் தொகுதி முன்னேற்றத்திற்கென ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திற்கான பத்து லட்சம் ரூபாயில் ஒரு குறித்த தொகையை ஒவ்வொரு ஆட்சிமன்ற உறுப்பினரும் இதற்காக ஒதுக்கித்தர முயல்வோம்'' இக்கட்டத்தில் மானிப்பாய் தேசிய பேரவை உறுப்பினர் திரு. தர்மலிங்கம் இவ்வருடம் இந்நிதி ஒதுக்கீடு முடிந்து விட்டதைச் சுட்டிக் காட்டியதும் ''இவ்வருடம் இதனை செய்ய முயல்வோம்'' என திரு. சிவசிதம்பரம் கூறினார்.

அடுத்து சாவகச்சேரித் தொகுதிப் பிரதிநிதி தமது உரையில், மாணவர்கள் தமக்குத் தேவையான நூல்கள்பற்றிய விபரத்தைத் தமக்குத் தெரிவிப்பின் தாம் வெளிநாட்டுத் தூதுவராலயங்களுடன் தொடர்புகொண்டு அந்நூல்களை அன்பளிப்பாகப் பெற்றுத்தர முயல்வதாகக் கூறினார்.

யாழ், றோட்டறிச் சங்கத் தலைவரும், யாழ். லயன்ஸ் கழகத் தலைவரும் தமது உரைகளில் இயலுமான நூல்களைத் தமது சங்கங்கள்மூலம் பெற்றுத்தர முயல்வதாக வாக்களித்தனர். சைவமகாசபை சார்பில் பேசிய தலைவர் தமது உரையில் சைவ வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்குமுரிய நூல்களைத் தமது சங்கம் பெற்றுத்தர முயலும் என்றார்.

வளாகத் தலைவர் க. வித்தியானந்தன் தமது முடிவுரையில், கைதடியில் அமையவுள்ள மருத்துவபீடம் சாவகச்சேரிக்கும், நுண்கலைப் பிரிவு மானிப்பாய்க்கும், யாழ்ப்பாண வளாகம் நல்லூருக்கும் உரியதாக இருப்பதால் பல்கலைக்கழகப் பிரச்னைகள் குறிப்பிட்ட ஒரு தொகுதியைமட்டும் சார்ந்ததாக அமையாது முழு ஆட்சி மன்ற தமிழ் உறுப்பினர்களாலும் கவனிக்கப்படவேண்டிய ஒன்றாக உள்ளது'' என்றார்.

(அ)

---

# 'தமிழ்ப்பிரதேச பொருளாதாரம்: ஜி. ஜி. யின் பணி மகத்தானது'

## வடமாநில வித்தியாதிபதி பாராட்டு

(பண்டத்தரிப்பு)

''தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்திக்கு அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் ஆற்றிய தொண்டு மகத்தானது. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத்தொழிற்சாலை, வாழைச்சேனை கடதாசி உற்பத்தித் தொழிற்சாலை ஆகியவற்றை நிறுவி அவர் ஆயிரக்கணக்கானோர் வேலை வாயப்புப்பெற வழிவகுத்ததை மறந்துவிடமுடியாது''

இவ்வாறு வடமாநில வித்தியாதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் பண்டத்தரிப்புஇந்துக்கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மரம்நாட்டுவிழாவிலும் வட்டுக்கோட்டைத் தொகுதி இளம் விவசாயிகள் சங்கங்களின் பொருட்காட்சியிலும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர் திரு. வி.நாகராஜா தலைமை வகித்தார்.

திருமாணிக்கவாசகர்மேலும் கூறியதாவது:

''எமது எதிர்கால இளம் சந்ததியினரான மாணவர்களுக்கு மரபநாட்டு விழாவில் முக்கிய இடம் அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடியதாகும். வருங்காலம் விவசாயத்தை நம்பியே உள்ளது விவசாயத்திற்கும் மரங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதனால் அனைவரும் ஒன்றுபட்டு பயன்தரு மரங்களை நாட்டி பொருளாதார வளத்தை கட்டி எழுப்பவேண்டும்'' என்றார்.

இவ்விழாவில் யாழ். மாவட்ட விவசாய சேவை அதிபர் திரு. நா. சிவமுத்துலிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: ''யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் விறகு பெறுவது மிகவும் சிரமமாக இருக்கிறது. மரங்களை வெட்டி அழித்துக் கொண்டு போவோமானால் எதிர்காலத்தில் நாங்கள் பல விதத்திலும் பாதிக்கப்படுவோம் என்பதை உணர வேண்டும். அழிப்பது எளிதானது. உண்டாக்குவது கஷ்டமானது. ஒரு மரத்தை அழித்தால் நாம் இருமரங்களை இதற்குப் பதிலாகநாட்ட வேண்டும். மரங்களை சம்பிரதாயத்திற்காக நாட்டிவிட்டு கடமைமுடிந்துவிட்டதென நாம் இருக்காது அவற்றிற்கு நீர் ஊற்றி, கால்நடைகள் அழிக்காதவாறு பேணிப்பாதுகாக்சவேண்டியது அவசியமாகும்''

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். ஜெகநாதன் உரையாற்றுகையில், ''மரம்நாட்டுவிழாவும் இளம் விவசாயிகள் சங்கங்களின் தினவிழாவும்ஒரேசமயத்தில்இங்கு நடைபெறுவது மிகவும் பொருத்தமானது. எமது எதிர்கால நல்வாழ்வுக்கு மரம் நாட்டு வைபவம் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். மாணவர்கள் இதில் ஆர்வமுடன் ஈடுபடுவதை கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட அரசாங்க அரசாங்க அதிபர் திரு.லயனல் பெர்ணன்டோ விழா ஆரம்பத்தில் ''சஞ்சீவி'' மரக்கன்று ஒன்றை நாட்டினார். அலங்கார ஊர்திகள் பவனி, விநோத உடைப் போட்டி, வானொலி விவசாய அறிவுப் போட்டி, நடனங்கள், நாடகங்கள் என்பனவும் நடைபெற்றன.

வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை திருமதி விமலாதேவி சிவமுத்துலிங்கம் வழங்கினார். தொல்புரம் கமத்தொழில் போதனாசிரியர் திரு. எம் சிவபாதம் நன்றியுரை நிகழ்த்தினார். (உ)

---

## கல்விச் சுற்றுலா

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி இந்து மகாவித்தியாலய மாணவிகள் கல்விச் சுற்றுலாவொன்றை மேற்கொண்டனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள மின்தறி ஆலைகள், சண்ணுடித் தொழிற்சாலைகள். காரைநகர் சீ-நோர் உற்பத்தி நிறுவனம், கசூரினா பீச் போன்ற இடங்களை பார்வையிட்டனர்.

மேற்படி கல்லூரியின் ஆசிரியை திருமதி செ. சோமசேகரம்பிள்ளை இச் சுற்றுலாவை ஒழுங்கு செய்து மாணவிகளை கூட்டிச் சென்றார். (உ)

---

## மன்னார் குடியிருப்பில் அரபுக்கல்லூரி

(மன்னார்)

''மன்னார், குடியிருப்பில் வாழும் முஸ்லிம் சிறுவர் சிறுமியரின் மார்க்க அறிவு மந்தமாகவே இருக்கிறது. ஊரில் ஏதாவது மார்க்கக் கடமைகள் நிகழும்போதுகூட மௌலூது ஓதுவதற்குக்கூட ஆள் இல்லாத நிலைமை நமது ஊரில் நெடு நாட்களாகவே நிலவிவருகிறது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாகவே இந்த அரபுக் கல்லூரி ஆரம்பிக்கப்படுகிறது. இதற்கான முழுச் செலவையும் நானே ஏற்றுக்கொள்ளுகிறேன்.''

இவ்வாறு மன்னார் குடியிருப்பு புதிய சோனகத் தெருவில் புதிதாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ள 'மத்ரஸா'வில் உரையாற்றுகையில், மத்ரஸாவின் ஸ்தாபகரும் பிரபல வர்த்தகருமான ஜனாப். கே. எம். சாகுல் ஹமீது குறிப்பிட்டார்.

மேற்படி 'மத்ரஸா'வுக்கான காணியை வழங்கி, கட்டிடத்தையும் கட்டிக் கொடுத்திருப்பதோடு மாதாந்தச் செலவுகளையும் ஏற்றுக்கொள்வதற்கு முன்வந்திருக்கிறார் ஜனாப் சாகுல் ஹமீது

மழைக்காலத்தில் மத்ரஸாவுக்குச் செல்வதற்கான ஒரு வீதி அமைத்துக் கொடுக்கும் செலவையும் இவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஆரம்ப விழாவில் ஜனாப் எச். எம். சரீபு, அல்-ஹாஜ் எம். எம். அப்துல்காதர் ஆகியோரும் உரையாற்றினர்.

மத்ரஸாவைக் கண்காணிக்கும் பொறுப்பு புதிய சோனக தெரு 'யங்-கிங்' மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்காகப் பதினைந்து பேர் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. (அ)

---

## 'பாம்புகள் கவனம்'

(மன்னார்)

மன்னார் பொதுநூலக வாசகர் வட்டக் கருத்தரங்குத் தொடரில் வைத்திய கலாநிதி திரு. எஸ். றுபேட் குரூஸ் 'பாம்புகள் கவனம்' என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

கருத்தரங்கிற்கு, வாசகர் வட்டத்தின் தலைவர் கலைவாதி கலீல் தலைமை வகித்தார்.பட்டினசபை விசேஷ ஆணையாளர் திரு. ஜோசப் செல்வநாயகம் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (அ)

---

## பண். கோப்புக்கு மின்தறி யந்திரங்கள் இறக்குமதியாகும்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இந்தியாவிலிருந்து ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான புதிய மின்தறி இயந்திரங்களை விரைவில்இறக்குமதி செய்யவிருக்கின்றது. இதற்கான அங்கீகாரத்தை அண்மையில் கூட்டுறவு அமைச்சு வழங்கியுள்ளது.

புதிய மின்தறி இயந்திரங்களை நேரில் சென்று பார்வையிட்டு கொள்முதல் செய்வதற்காக பண்டத்தரிப்பு ப; நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். கந்தையா தலைமையில் குழுவொன்று அடுத்த வாரம் இந்தியா செல்லவிருக்கின்றது. சங்கத்தில் கடமையாற்றும் தொழில் நுட்பவியலாளர் ஒருவரும் இக்குழுவுடன் செல்லுகின்றார். (உ)

---

## கொக்குவில் கி. ச. நூலக திறப்பு விழா

(திருநெல்வேலி)

கொக்குவில் கிராமசபையின் பொதுநூலகத்தை நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் திறந்துவைத்தார்.

விசேட ஆணையாளர் திரு. என். அமுதசாகரன் விழாவுக்குத் தலைமை வகித்தார்.

யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் மங்களவிளக்கேற்றினார். யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் சிறப்புரையும், திரு. ஏ. சிவபாதம் நன்றியுரையும் நிகழ்த்தினர். (உ)

---

## படக்காட்சி

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி கிராமசேவையாளர் பிரிவில் எதிர்வரும் 27ம் தேதி தொடக்கம் அரசாங்க திரைப்படக் கூட்டுத்தாபனத்தினால் சினிமாப்படக்காட்சி காண்பிக்கப்படவிருக்கிறது.

எதிர்வரும் 27ம் தேதி கணேசபுரம் கிராம அபிவிருத்

[5-ம் பக்கம் பார்க்க]

# "லஞ்சம், ஊழல் அற்ற நல்லாட்சி புரிகிறார் எம். ஜி. ஆர்."

## ஓராண்டு சாதனை பற்றி மந்திரி வீரப்பன் விளக்கம்

சென்னை, யூலை 23

தமிழக அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக்கழகத்தின் கடந்த ஓராண்டுக் காலப் பணிகளை நாம் சாதனைகள் என்று கூற விரும்பவில்லை. பேரறிஞர் அண்ணாவின் வழியில் தமிழ்நாட்டை அபிவிருத்திசெய்ய அடித்தளம் ஒன்றை அமைத்துள்ளோம். பெரும் சாதனைகளுக்கு வடிவம் அமைத்துள்ளோம்; தடைப்பட்ட பல திட்டங்களைப் புதுப்பித்துள்ளோம்; போர்க்களத்தில் எதிரிகளால் வெடிவைத்துத் தகர்க்கப்பட்ட பாதைகளையும் பாலங்களையும் செப்பனிட்டபடியே முன்னேறிச் செல்லும் இராணுவ வீரர்களின் நிலையில் நாம் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் முன்னேறிச் செல்கின்றோம்"

இவ்வாறு தமிழ்நாடு அரசின் ஓராண்டு சாதனைகள் பற்றி முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் சார்பாக செய்தி அறுநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் வானொலியிலும் டெலிவிஷனிலும் உரையாற்றுகையில் கூறினார்.

லஞ்சமற்ற, ஊழலற்ற நீதி நிர்வாகத் துறையில் தலையிடாத ஓர் அரசை தமிழ் நாட்டில் நிறுவி, உயிரைக் கொடுத்தேனும் வாழ்க்கை வசதிகளை இழக்க நேரிடினும் அண்ணாவின் கொள்கைகள் பிறழாதவகையில் ஆட்சி செலுத்துவோம் என முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் 1977ம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் நாள் பேரறிஞர் அண்ணாவின் உருவச்சிலையின் முன் உறுதிமொழி எடுத்து ஆட்சிபீடம் ஏறினார் என்றும் கூறிய திரு. வீரப்பன் மேலும் கூறியதாவது:

### போராட்டமாக வெடித்த பிரச்னைகள்

தி. மு. க. ஆட்சிக் காலத்தில் அவர்கள் நிறைவேற்றத் தவறிய-நிறைவேற்ற மறுத்த பல திட்டங்கள் எம்மீது சுமத்தப்பட்டன. அரச ஊழியர்கள், மாணவர்கள், விவசாயிகள் ஆசிரியர்கள் ஆகியோரின் தீர்க்கப்படாத பிரச்னைகள், நாம் பதவிஏற்றதும் போராட்டமாக வெடித்துச் சிதறின.

### போராட்டத்திற்குத் தூபம்

தி. மு. க.வினர் மேற்படி பிரச்னைகளை தமது ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றத்தவறியது மட்டுமல்லாது இன்று அவர்களின் போராட்டத்துக்குத்தூபமிட்டு வருகின்றனர்.

72ம் ஆண்டு ஆரம்பமான விவசாயிகள் போராட்டத்தின் போது துப்பாக்கிப் பிரயோகம் செய்து 20 விவசாயிகளைப் பலி கொண்டதுடன் நிறுத்திவிடாது, போதாத நிலைக்கு 75 செப்டம்பர் மாதத்தில் அவசரகால நிலையைப் பயன்படுத்தி அவர்களை அடக்கினர்.

அன்று அரசுஅலுவலர்களின் கோரிக்கைகளை அடக்கு முறையினால் முறியடித்து பழிவாங்கினர். அவர்களினால் பழிவாங்கப்பட்ட 98 பேருக்கு நாம் நிவாரணம் அளித்தோம்.

### இயற்கையின் சீற்றம்

நாம் பதவியேற்ற நான்கு மாத காலத்திலேயே இயற்கையின் சீற்றம் தமிழ் நாட்டைப் பெரிதும் பாதித்தது. அப்போது ஏற்பட்ட புயலினாலும், வெள்ளத்தினாலும் பல்லாயிரக் கணக்கானோர் வீடுகளை இழந்ததுடன் நூற்றுக் கணக்கானோர் உயிர்களையும் இழந்தனர் அவற்றுக்கெல்லாம் நிவாரணம் அளிப்பது எமது கடமை அல்லவா?

அப்படியான சேதத்துக்கு மத்தியில் எமது ஆட்சிக்காலத்தில் 53 லட்சம் தொன் நெல் விளைச்சல் அதாவது அதற்கு முந்தையஆண்டைவிட 10லட்சம் தொன் நெல் விளைந்தது! அரிசியின்விலை கடந்த ஐந்து ஆண்டுகளில் இல்லாதவாறு குறைந்தது. 72ம் ஆண்டு அரிசி ஒரு கிலோ 3 ரூபா, 4 ரூபாவாக விலை சென்றது. ஆனால் இப்போது கிலோ 1-50, 1-80 அத்துடன் உணவுப் பொருட்களின் விலையும் குறைக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் நாம் சாதனை என்று பறைசாற்ற விரும்பவில்லை.

சென்னையில் குடிநீர்ப் பிரனையைத் தீர்க்க தி. மு. க. ஆட்சியில் 53 லட்சம் ரூபா செலவிடப்பட்டது. வீராணம் திட்டத்திற்கு 23 லட்சம் ரூபா செலவிட்டதும் இதற்குள் அடங்கும் ஆனால் தண்ணீர்ப் பிரச்னை தீர்க்கப்படவில்லை. காடு, மேடுகளில் தண்ணீருக்காக அலையும் தமிழ்ப்பெண்களின் கண்ணீரைத்துடைத்த பின்னரே நாம் அது எமது சாதனை என்று கூறுவோம்.

பொதுமக்களின் பணத்தைச் சிந்தாமல் சிதறாமல் அவர்களுக்காக அவர்களுக்குப் பயன் தரக்கூடியவிதத்தில் செலவிடுவதே நமது முதல்வரின் முக்கியபணி.

அமைதியோடும் உறுதியோடும் ஏழை, எளிய மக்களின் ஆதரவோடும் நாம் தொடர்ந்து நல்லாட்சி புரிவோம். (இ)

## பெருமழை விளைவித்த அனர்த்தங்கள்

புதுடில்லி, ஜூலை. 23

ராஜஸ்தானில் பெருமழை காரணமாக 13 பேர் உயிரிழந்தனர்.

பெருமழையால் வடக்கு பிகாரில் 40 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (உ)

## ஹவானா பயணம்

புதுடில்லி, ஜூலை. 23

ஜனதாகட்சிச் செயலாளர்களான தேஷ்முக், ஹெக்டே ஆகியோர் மாநாடு ஒன்றில், கலந்துகொள்ளும் பொருட்டு ஹவானா பயணமாகியுள்ளனர். (உ)

# "தி மு. க. வுடன் உறவு சாத்தியமில்லை" -- இந்திரா காந்தி

மீனம்பாக்கம் ஜூலை, 23

தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ் கட்சி திராவிட முன்னேற்றக் கழகத்துடன் உறவுகொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் எதுவும் கிடையாது என்று திருமதி காந்தி தெரிவித்தார்.

மதுரைக்குச் செல்லும் வழியில் திருமதி காந்தி சென்னை மீனப்பாக்கம் விமானநிலையத்தில் பத்திரிகையாளரிடம் உரைநிகழ்த்தினர்.

பும்மொழிக் கொள்கை தான் இந்திராகாங்கிரஸின் கொள்கை என்றும் திருமதி காந்தி கூறினர். (இ)

# நாட்டில் ஒழுங்கின்மை குற்றச்செயல் அதிகரிப்பு

## மதுரையில் இந்திரா பேச்சு

மதுரை, ஜூலை 23

''நாட்டில் ஒழுங்கு குலைந்து விட்டது. குற்றங்கள் பெருகி விட்டன'' இவ்வாறு முன்னாள் பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி சொன்னார்.

மதுரை மாநகராட்சித் தேர்தல் பிரசாரத்தின்பொருட்டு மதுரை வந்துள்ள திருமதி காந்தி இங்கு நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ''ஜனதா ஆட்சி அரசாங்கம் தவறான கொள்கைகளைப் பின்பற்றிவருகிறது. இவ்வரசாங்க காலத்தில் விலைவாசிகள் உயர்ந்துள்ளன. மக்கள் கஷ்டமடைகின்றனர், இவ்வரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை சீரற்று இருப்பதே இதற்குக் காரணம்'' என்றார்.

அடுத்தமாதம் 9ம் திகதி பாரதம் சாக்கும் தினமாக அனுஷ்டிக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார், (உ)

# சஞ்சயின் ஒருநாள் விஜய செலவு ரூ. 2லட்சத்து24,000

பெங்களூர், ஜூலை 23

இந்திரா முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி ஆட்சியிலிருந்தபோது அவரின் புதல்வர் சஞ்சய்காந்தி கர்நாடக மாநிலத்தில் ஒருநாள் விஜயம்செய்தபோது ஒருநாள் விஜயத்திற்கு மட்டும் மாநில அரசு இரண்டு லட்சத்து 24 ஆயிரம் ரூபா செலவிட்டது என கர்நாடக சட்டசபையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

[5-ம் பக்கம் பார்க்க]

ம. கி. பிரச்னை:

# சுமுகமாகத் தீர்வதற்கு இஸ்ரேல் இடையூறு

## சதாத் கண்டனம்

கெய்ரோ, ஜூலை. 23

மத்திய கிழக்குப் பிரச்னை சுமுகமாகத் தீர்வதற்கு இஸ்ரேல் முட்டுக்கட்டையாக இருக்கிறது என்று எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமர் பெகின்மீது இது விடயத்தில் அவர் பலத்தகண்டனம் தெரிவித்தார்.

ம. கி. பிரச்னையில் இஸ்ரேல் முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றபோதிலும் இஸ்ரேலிய அரசுடனும் எதிர்க்கட்சியுடனும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடத்தப்படும் என்றும் சதாத் சொன்னார். (உ)

# 'கியூபா, ரஷ்யாவின் அடிவருடியாக இருக்கிறது"

## சீனா சீற்றம்

பீக்கிங், ஜூலை 23

''பொருளாதார ரீதியில் சோவியத் யூனியனின் தயவை எதிர்பார்த்திருக்கும் கியூபா அந்நாட்டின் அடிவருடியாக இருக்கிறது.''

இவ்வாறு சீனா குற்றம் சாட்டியுள்ளது. பீக்கிங்கில் இருந்து வெளிவரும் 'பீப்பிள்ஸ் டெய்லி'' சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரை ஒன்றில் சீனா கியூபாமீது இக்குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளது.

அணிசேரா இயக்கத்துக்குள் பிரிவை ஏற்படுத்தி சோவியத் யூனியனின் ஆதிக்கத்தை வியாபிக்க கியூபா உதவுகிறது என்றும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

பெல்கிரேட்டில் அணிசேரா இயக்க மாநாடு நடைபெறவிருக்கும் இவ்வேளையில் கியூபாமீது சீனா இக்குற்றச்சாட்டைச் சுமத்தியிருப்பது குறிப்பிடத்தக்கஒன்று என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

# திருமதிகாந்தி மீது மற்றுமொருவழக்கு

புதுடில்லி, ஜூலை 23

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திமீது மற்றுமொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது!

கடந்த தேர்தல் காலத்தில் தேர்தல் பிரசாரத்திற்காக பம்பாயிலுள்ள ஜீப் தொழிற்சாலை ஒன்றிலிருந்து 139 ஜீப் வண்டிகளை எதுவித செலவுமின்றி அதிகாரத்தைப் பயன்படுத்தி எடுத்துப் பாவித்தார் என்றும், சதியொன்றில் ஈடுபட்டார் என்றும் திருமதி காந்தி மத்திய புலனாய்வுக் கழ

[5-ம் பக்கம் பார்க்க]

## படக்காட்சி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திச் சங்கத்திலும் 28 ம் தேதி இரத்தினபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் 29 ம் தேதி ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் இப்படக்காட்சி இடம்பெறும். (உ)


Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
2nd Glorious and Crowded Week
Peter Fonda,
DIAMOND MERCENARIES

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
முத்துராமன்
சுஜாதா - பத்மப்பிரியா
உறவுசொல்லஒருவன்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
நினைத்ததை முடிப்பவன்
(புதிய- பிரதி கலர்)


## திருமதி காந்தி

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கம் நேற்று புதுடில்லி விசேட நீதிபதி முன் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்தது.

திருமதி காந்தியுடன் முன்னுள் பெட்ரோலிய எரிபொருள் அமைச்சர் திரு. ஷெட்டி, திருமதி காந்தியின் முன்னுள் அந்தரங்கக் காரியதரிசி, சுருக்கெழுத்தாளர் உட்பட ஐவர்மீதும் மேற்படி குற்றச்சாட்டுக்களுக்காக குற்றப்பத்திரம் தாக்கல்செய்யப்பட்டது,

இவ்விசேட நீதிமன்றம் திருமதி காந்தியையும் மற்றும் ஐவரையும் அடுத்தமாதம் 23ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளது.

தமது பதவிக்காலத்தில் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் தம்மை எதிர்த்த தலைவர்களைக் கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் ஏற்கனவே திருமதி காந்தி மீது ஒரு வழக்குத் தொடரப்பட்டது தெரிந்ததே. (இ)


REGAL Jaffna Daily at 4-45, 7- & 9-30 p m only.
James Bolam, Rodney Bewes
in
THE LIKELY LADS
(color)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
நடித்த
படித்தால் மட்டும் போதுமா

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - கே.ஆர்.விஜயா
(புத்தம் புதிய பிரதி) பட்டணத்தில் பூதம்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - வாணிஸ்ரீ
நிறைகுடம்

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7692
சிவகுமார், அல்கா
மதனமாளிகை


### “கூட்டுறவு இயக்கத்தில்

# தூய்மை மிளிர்ந்தாலே மக்கள் மதிப்புக்கிடைக்கும்”

-- அமிர்

(திருநெல்வேலி)

“கூட்டுறவுஇயக்கம் மக்கள் இயக்கம். மக்களின் உடைமையைப் பாதுகாத்து அவர்களுக்கு நேர்மையான பணியாற்றவேண்டியது ஊழியர்களின் கடமை”

இவ்வாறு எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க கூட்டுறவாளர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்,

திரு. சி. சிவமகாராஜா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மேலும் அவர் கூறியதாவது;

“கூட்டுறவு ஊழியர்கள் மக்கள் நம்பிக்கையைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும்” என்ருர்.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில், “கூட்டுறவு இயக்கம் முன்பு அரசியல் இயக்கமாக இருந்து வந்தது. இப்போது அது மக்கள் இயக்கமாக மாற்றப்பட்டு வருகிறது. ஊழியர்கள் தம் பிரச்னைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கமுயலவேண்டும். எடுத்ததற்கெல்லாம் வேலை நிறுத்தம் என்ருல் அது அர்த்தமற்றுப்போய்விடும், கூட்டுறவு இயக்கம் உற்பத்தியைப் பெருக்கி ஏழை, நடுத்தர மக்கள் வாழ்வு உயர வழிசெய்ய வேண்டும்” என்ருர்.

இவ்விழாவையொட்டி 15ம் திகதியில் இருந்து 22ம் திகதி வரை போட்டிகள் நடைபெற்றன.

பரிசில் பெற்றவர்களுக்கு திருமதி மங்கையர்க்கரசிஅமிர்தலிங்கம் பரிசில்களை வழங்கினர். (உ)

## கப்பலில் டாலர்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் வைத்து கப்பலொன்றில் வெளிப்படுத்தப்படாத 2000 டொலர்களை யாழ். சுங்கப்பகுதியினர் நேற்று முன்தினம் கைப்பற்றினர்கள். விசாரணை நடத்திய உதவி சுங்க சேகரிப்பாளர் திரு. எம், ஜே. சேனரத்ன 5000 ரூபா அபராதம் விதித்தார். (க)

## பாலர் பாடசாலை ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை குமரன் பாலர் பாடசாலையின் 8-வது ஆண்டு விழாவும், இல்ல மெய்வல்லுநர்ப் போட்டியும் மூத்த விநாயகர் ஆலய முன்றலில் இம்மாதம் 29 ம் தேதி பிற்பகல் நடைபெறவிருக்கிறது,

திரு. சி. விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில், மானிப்பாய் எம். பி. திரு. வி. தருமலிங்கம், செந்தமிழர் இயக்கபொதுச் செயலாளர் திரு.வி. பொன்னம்பலம், திருமதி வி.பொன்னம்பலம் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்கள்.

திரு. வ. பொன்னம்பலம் மங்களவிளக்கேற்றிவைப்பார். திரு. வி. தருமலிங்கம் பாடசாலைக் கொடியேற்றிவைப்பார். செல்வி அனுஷியா தியாகராசா வரவேற்புரை நிகழ்த்துவார்.

திருமதி பொன்னம்பலம் பரிசில் வழங்குவார். (க-அ)

## சஞ்சயின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இதைஅடுத்து சபையில் அரசு தரப்பினருக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையே பலத்த வாக்குவாதம் இடம்பெற்றது.

சஞ்சாயகாந்திக்கு செய்யப்பட்டசெலவு சரியானது என்று தெரிவித்த மாநில முதல்வர் திரு. தேவராஜ் அர்ஸ், திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் முன்னர் ஒருமுறை கர்நாடகம் வந்தபோதும் பெருந்தொகைப் பணம் அவரின் பாதுகாப்புக்காகச் செலவிடப்பட்டது என்றும் கூறினர்.

அப்போது திரு. ஜெயப்பிரகஷுடன் சஞ்சய்காந்தியை ஒப்பிட்டுப் பேசவேண்டாம் எனக்கூறிய எதிர்க்கட்சி உறுப்பினர் இருவர் தமது இருக்கையைவிட்டு எழுந்து காரசாரமாகக்கண்டித்தனர் இதை அடுத்தே சபையில் பலத்த வாக்கு வாதம் எழுந்தது. (இ)

## மருத்துவ மாதருக்கு சைக்கிள்கள்

(பண்டத்தரிப்பு)

யாழ்.மாவட்டத்தில்கடமையாற்றும் பொது சுகாதார மருத்துவ மாதர்களுக்கு சைக்கிள்வண்டிகள் சுகாதார இலாகாவினுல் விரைவில் வழங்கப்படவுள்ளன.

மருத்துவ மாதர்கள் கிராமப்புறங்களிலும் பின்தங்கிய பிரதேசங்களிலும் தங்கள் வெளிக்கள வேலைகளை இலகுவாகச் செய்வதற்கு பிரயாண வசதி ஏற்படுத்திக்கொடுக்கும் திட்டத்திற்கு அமைய இந்த சைக்கிள் வண்டிகள் வழங்கப்படுகின்றன.

தற்போது யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலக அதிகாரிகள் இந்த சைக்கிள் வண்டிகளை பெற்றுக்கொள்ள தகுதியுடையவர்களின் விபரங்களை யாழ். மாவட்டத்திலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவுகளிலிருந்தும் திரட்டிவருகின்றனர். (உ)

## போட்டி முடிவுகள்

(நீர்வேலி)

வலிகிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது விற்பனைக்கிளை நிலையங்களுக்கிடையில் நடாத்திய சிறந்த கிளைக்கான போட்டி முடிவுகள் வருமாறு:

1ம் இடம்- திரு. க. சிவலிங்கம் (இருபாலைச் சந்தி).

2ம் இடம் திரு. கே. நடேசன்(அச்செழு), திரு. சீ. கதிர்காமநாதன் (நீர்வேலிவடக்கு)

3ம் இடம்- திரு. பூ. குலராசசிங்கம் (உரும்பராய்சந்தி) திரு. க. தர்மலிங்கம் (கோப்பாய் சந்தி), திரு. க. சிவபாலசுந்தரம் (நீர்வேலிமத்தி). (இ)

## வில்லிசை அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலய மாணவன் செல்வன் சி. சிவகுமாரின் வில்லிசைப் பாட்டு அரங்கேற்றம் மேற்படி வித்தியாலய இந்துமாமன்ற விசேஷ கூட்டத்தில் அதிபர் திரு. இரா. செல்வராஜா தலைமையில் நடைபெற்றது.

அதிபர் தமது தலைமையுரையில் எதிர்காலத்தில் நாடுபோற்றும் வில்லிசைக் கலைஞனுகச் சிவகுமார் திகழ்வார் என நம்பிக்கை தெரிவித்தார்.

“கடவுளை நம்பினோர் கைவிடப்படார்” என்ற தலைப்பில் அன்று நடத்தப்பட்ட வில்லிசைப் பாட்டிற்கு மேற்படி வித்தியாலய மாணவர்கள் செல்வன் சி. விஜயாலன் (கடம்) செல்வன் தெ யோகேந்திரன் (வயலின்) அ. செந்தில்நாதன் மிருதங்கம்) செல்வன் மா. ஜெகநாதன் (கெஞ்சிரா) செல்வன் அ, முருகானந்தம் (தாளம்) என்பவற்றை இசைத்தனர். (உ)

## அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாய விற்பனை உற்பத்தியாளர் சங்கம் ஒன்றுஅங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் பிரச்னைகள் பற்றியும் வெங்காயம், மிளகாய் இறக்குமதியினுல் ஏற்பட்டுள்ள நிலைமை பற்றியும் ஆராயப்பட்டது. அரசியல் கலப்பற்ற சங்கமாக இது இயங்கும்என்றும்தெரிவிக்கப்பட்டது.

தலைவராக திரு. எஸ். பத்மநாதனும், உப-தலைவராக திரு. கே. குமாரசாமியும், செயலாளராக திரு. எஸ். திருச்சிற்றம்பலமும், தனுதிகாரியயாக திரு. எஸ். சேனுதிராசாவும் 22 கமிட்டி உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (க)

## “சமய நூல்களின் அவசியம்”

(யாழ்ப்பாணம்)

அன்னை பராசக்தி போன்ற எளிமையான சிறிய சமய நூல்கள் இக்காலகட்டத்தில் வெளிவருவது மிகவும் அவசியமான தொன்ருகும். முக்கியமாக இந்து நாகரிகத்துறையில் பயனுடைய இவை வெளிவருவது பலருக்கும் நன்மைபயக்கும்.

அன்னை பராசக்தி நூல் வெளியீட்டு விழாவில் பேசிய பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் மேற்கண்டவாறு கூறினர்.

கோப்பாயைச் சேர்ந்த எஸ். சிவம் எழுதிய இந்நூல் வெளியீட்டுவிழா கோப்பாய் வடக்கு கந்தசாமி கோவில் முன்றலில் சொக்கன் தலைமையில் நடைபெற்றது.

வடகோவை கலாமன்றத்தினர் ஒழுங்கு செய்திருந்த இவ்விழாவில், வலிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. சொக்கலிங்கம், திரு. நா. சுப்பிரமணியம், திரு. சோ. சுப்பிரமணியக் குருக்கள் ஆகியோர் உரையாற்றினர்கள்.

செல்வி அ. நா. தாஷாயணின் இசைக் கச்சேரியும், கலை நிகழ்ச்சியும் இடம்பெற்றன. நூலின் முதல் பிரதியை திரு.கே. கனகலிங்கம் பெற்றுக்கொண்டார். (க)

## வல்லை நெசவாலை: மாதவனை பதவி நீக்க நிர்வாகசபை முடிவு

(வல்வெட்டித்துறை)
வல்லை நெசவாலையின் இயங்கும் இயக்குநரான திரு. ஆர். மாதவனைப் பதவிநீக்கம்செய்வதென்று நேற்று முன்தினம் நடைபெற்றநெசவாலையின் நிர்வாக சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

வல்லை நெசவாலையின் நிர்வாகசபைக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. நிர்வாகசபையின் மொத்த உறுப்பினர்களான பத்துப் பேரில் ஆறுபேர்தான் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம், திரு. பி. எஸ். இராசநாயகம், திரு. எஸ். அப்புக்குட்டி, திருமதி அழகரத்தினம், திரு. எஸ். பாலசுப்பிரமணியம், திரு. ஆர். மாதவன் ஆகிய ஆறுபேருமே கூட்டத்தில் கலந்து கொண்டவர்களாவர். நெசவாலையின் தலைவரான திரு. வி. இராஜசங்கரியும், மானேஜிங் டைக்டரான திரு: ரி. குமாரவேலுவும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லை.

இந்த நிர்வாகசபைக் கூட்டத்துக்கு டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தலைமை வகித்தார்.

நெசவாலையின் இயங்கும் இயக்குநரான திரு. ஆர். மாதவனை வேலையிலிருந்து நீக்க வேண்டுமென டாக்டர் தர்மலிங்கத்திஞல் பிரேரிக்கட்பட்டு திரு. அப்புக்குட்டியினுல் அனுமதிக்கப்பட்ட பிரேரணை இக் கூட்டத்தில் முதலில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

இயங்கும் இயக்குநரைஎதற்காகப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்ற கேள்வி கூட்டத்தில் கிளப்பப்பட்டதாகவும் இதற்குப் பலகாரணங்கள் இருப்பதாகப் பதில் அளிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

தொழிலாளரின் சம்பளம் உயர்த்தப்படாதிருக்கையில் மேற்பார்வை உத்தியோகத்தர்களை கூடிய சம்பளத்தில் நியமிப்பதை ஆட்சேபித்துத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வதற்கு ஆயத்தம் செய்வதாலும், திரு. ஆர். மாதவன் தமது பங்காளருக்கான பணத்தைச் செலுத்தாததாலும், போதிய கல்வித் தகமை இல்லாததாலும் அவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்பதற்கு முக்கிய காரணங்களாகக் கூறப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இதற்கு முன்னதாக நெசவாலையின் நன்மையைக் கருதி பதவியிலிருந்து ராஜிஞமாச் செய்யுமாறு திரு. மாதவனை வற்புறுத்தியதாகவும் ஆனல் தாம் ராஜிஞமாச் செய்ய வேண்டியதற்கு எவ்வித காரணமும் இல்லையென்றும் திரு, மாதவன் கூறியதாகவும் அறியப்படுகிறது.

ஆலையின் உற்பத்தியிலோ, ஆலையின் வருமானத்துக்கோ அல்லது அதன் நற்பெயருக்கோ தாம் இழுக்கு ஏற்படுத்தக் கூடிய வகையில் நடந்து கொண்டதாக யாராவது ஆதாரம் காட்ட முடியுமா என்று திரு. மாதவன் கேட்டதாகவும் அறியப்படுகிறது.

ஆனல் இதற்கு எவரும் பதிலளிக்கவில்லையென்றும் இதன் பின்னர் திரு. மாதவனைப் பதவி நீக்கம் செய்யும் பிரேரணை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாகவும் தெரிகிறது.

கூட்டத்திலிருந்து திரு. மாதவன் வெளியேறுவதற்கு முன்னர் தமது பதவியை மீண்டும் பெறுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிவித்து விட்டு வெளியேறியதாகவும் தெரிகிறத.

## வல்லை நெசவாலை வளர குழப்புகிறுர்கள் எனப் புகார்

(வல்லை நெசவாலையின் பிரரனை பற்றி சென்ற எட்டாந்தேதி 'ஈழநாடு' பத்திரிகையில் கரவெட்டியைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை என்பவர் எழுதிய கடிதம் ஒன்று வந்தது தொடர்பாக யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த டாக்டர் கே. கிருஷ்ணனந்தசிவம் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். இது சம்பந்தமாக வல்லை நெசவாலையுடன் தொடர்புள்ளவர்களின் சுருக்கமான அறிக்கைகளையும் வெளியிடுவோம். ஆ-ர்)

தமிழ் சமுதாயத்தின் நன்மைக்காக வல்லை நெசவாலையைச் சீர்செய்யும்படி டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் பல தடவைகள் எனது இல்லம் வந்து கேட்டுக் கொண்டார். இதஞல் நான் சில வேலைகள் செய்வதற்கு ஒருப்பட்டேன். நான் வேண்டிக் கொண்டதன் பேரில் றிச்சார்ட் பீரிஸ் கம்பனியில் இயங்கும் இய்க்குநரும் பிரபல கைத்தொழில் இயக்குநருமான திரு. குமாரவேல் பி. எஸ், ஸி. (பொறியிலாளர்) எம், பி. ஏ. சட்டத்தரணி வல்லை நெசவாலையைச்சீர் செய்வதற்கு ஒருப்பட்டார். இதற்காக அவர் லட்சக்கணக்கான ரூபாய்களை வல்லை நிதியினுள் சேர்த்து உற்பத்தி விற்பனை ஆகியவைகளை ஒழுங்கு செய்தார். வழக்குகள் அனைத்தையும் சமாதான முறையில் தீர்ப்பதற்கு ஒழுங்குகள் செய்தார். ஆனல் வல்லை நிர்வாக சபை நல்ல வேலைகளைக் குழப்பி வல்லையை இயங்காமல் செய்வதற்கு முயல்கின்றனர். கடந்த மூன்று வருடங்களாக பொதுச்சபை கூட்டப்படவில்லை. கணக்குகள் சமர்ப்பிக்கப்படவில்லை, கணக்குகள் ஒழுங்குசெய்யத் தலைப்பட்ட பின்னர்தான் இவர்கள் பிரச்னை கொடுக்கத் தலைப்பட்டுள்ளனர். என்னுலும் எனது நண்பர்களிஞலும் வல்லை வளர வேண்டுமென்பதற்காக சுமார் ஒருவருடத்துக்கு முன் கொடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான ரூபாய் கணக்கு ஏட்டில் வரவுவைக்கப்படவில்லை.

இதுதொடர்பாக நான் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி., திரு. சி. கதிரவேலுப்பிள்ளை எம். பி., திரு. கே. ஸி. நித்தியானந்தன் ஆகியோரிடம் முழுவிபரத்தையும் தெரிவித்துள்ளேன்.

வல்லை நெசவாலையின் பங்குதாரர்களுக்கும் இயக்குநர்களுக்கும் வல்லையின் வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்களுக்கும் குறிப்பாக இளைஞர்களுக்கும் இதைச்சுவனத்தில் கொண்வர வேண்டுமென்பதற்காக இந்த அறிக்கையை விடுக்கின்றேன்.

### அமரர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தைக் கட்டிவளர்த்த பெருமை அமரர் குமாரசாமியையே சாருமென்றும், அவர் சிறுபான்மை இனத்தவராக இருந்தும் பலகாலம்கொழும்பு மாவட்ட செயலாளராகஇருந்திருக்கிருரென்றும் தொழிற் சங்கங்களின் கீழ்நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லீம் இன மக்களது விமோசனத்திற்காகவும் விடுதலைக்காகவும் போராடினுரென்றும் குறிப்பிட்டார்.

### ஆஸிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கிருர்கள்.

பிராந்திய ரீதியில் கூட்டம் இம்மாநாடு முதல்முதலில் 1962ல் ஜப்பானிலும் பின்னர், தாய்லாந்து, சிங்கப்பூரிலும் நடைபெற்றது. இலங்கையில் இம்முறை தான் மாநாடு முதற்தடவையாகக் கூட்டப்படுகின்றது.

இலங்கைத் தூதுக்குழுவுக்கு, கல்வியமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்ன தலைமைவகிக்கின்ருர்,

## 'வைக்கிங்ஸ்' வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

முதல் போட்டியில், யாழ்ப்பாணம் 'வைக்கிங்ஸ்' விளையாட்டுக் கழகம் - அராலி சில்வஸ்டார் விளையாட்டுக் கழகத்தை 2—0 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு திரு. எஸ். அன்ரனிப் பிள்ளை ம்த்தியஸ்தம் வகித்தார்.

பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகத்துக்கும், புனிதவளன் கழகத்துக்குமிடையில் நடைபெறவிருந்த இரண்டாவது 'ஏ' பிரிவுப் போட்டியில், புனிதவளன் கழகம் மைதானத்திற்கு குறிப்பிட்ட நேரம்வரை வராததிஞல் மேற்படிப் போட்டி நடைபெறவில்லை.

### இன்றைய மோதல்கள்

இன்று நடைபெறவிருக்கும் போட்டிகளில் முதல் ஆட்டத்தில், பாஷையூர் சென். அன்ரனிஸ் 'பி' பிரிவுக் கோஷ்டியும் - யாழ். முஸ்லீம்ஸ் 'பி' பிரிவுக் கோஷ்டியும் மோதும். இரண்டாவது ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் கழகமும் - யாழ். முஸ்லீம்ஸ் கழக 'ஏ' பிரிவுக் கோஷ்டியும் மோதுகின்றன.

## மரத்திலிருந்து விழுந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

பனைமரத்தில் ஓலைவெட்டிக் கொண்டிருந்தவர் தவறி விழுந்து ஸ்தலத்திலேயேகோரமாக மரணமானுர்.

இச்சம்பவம், கொக்குவில் புகையிரதநிலையத்துக்கு முன்பாக நேற்றுமாலை கொக்குவிலைச் சேர்ந்த தொய்யர் சின்னத்தம்பி (வயது 45) என்பவரே இவ்வாறு மரணமானுர். (கெ)


# அறிவித்தல்

**செக்கோஸ்லவாக்கியா நாட்டின் பிடவை உற்பத்தி நிபுணரான பேராசிரியர் ஊர்பன், எமது ஸ்தாபனத்தின் அன்பழைப்பை ஏற்று, வட பகுதிக்கு விஜயம் செய்கிறுர்.**

**பிடவை உற்பத்தியாளருக்கும், புதிய மின்தறி ஆலை நிறுவ இருப்போருக்கும் ஆலோசனை வழங்க, 25-ந் திகதியும், 26-ந் திகதியும் சுபாஸ் டூறிஸ்ட் ஹோட்டலில் சந்திப்பார்.**

மேலதிக விபரங்களுக்கு:

PEC

## புரோமோட்டோர்ஸ் என்ஜினியரிங் கம்பெனி லிமிட்,

PROMOTRS ENGINEERING COMPANY LTD.

844, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram: Eelanaadu - Telephone: 389 - Registered as a News paper in Sri Lanka.